**Gladys Berejiklian**
Premier of NSW

**John Barilaro**
Deputy Premier

**Brad Hazzard**
Minister for Health and Medical Research

# MEDIA RELEASE

வியாழக்கிழமை, 26 ஆகஸ்டு 2021

## தடுப்பூசி போட்டவர்களுக்கு அளிக்கப்படும் புதிய சுதந்திரங்கள் கோவிட் ஒழிக்கும் மாநில செயல்திட்டத்துக்கான முதல் படி

கோவிட்-19 இரண்டு தவணை தடுப்பூசிகளையும் போட்டுக்கொண்ட நியூ சவுத் வேல்ஸ் முழுவதும் உள்ள மக்களுக்கு, ஆறு மில்லியன் தடுப்பூசிகள் என்ற இலக்கை நியூ சவுத் வேல்ஸ் எட்டியபிறகு, அடுத்த மாதம் மேலும் சுதந்திரங்கள் வழங்கப்படும்.

இது செயல்திட்டத்தின் முதல் படியாகும். மேலும் 70 மற்றும் 80 சதவீதம் புதிய தடுப்பூசி இலக்குகளை மாநிலம் எட்டும்போது, தடுப்பூசி போட்டுக் கொண்டவர்களுக்குக் கூடுதல் சுதந்திரங்கள் அடுத்து வரவிருக்கின்றன.

டாக்டர் கெர்ரி சாண்ட் (Dr Kerry Chant) மற்றும் அவரது குழு, அத்துடன் நியூ சவுத் வேல்ஸ் தலைமை மனநல மருத்துவர் டாக்டர் முர்ரே ரைட் (Dr Murray Wright) ஆகியோருடன் கலந்தாலோசித்த பிறகு, கோவிட்-19 தடுப்பூசி **இரண்டு தவணைகளையும்** போட்டுக்கொண்ட வயது வந்தோர்க்குப் பின்வரும் தனிப்பட்ட சுதந்திரங்கள் அனுமதிக்கப்படும்:

செப்டம்பர் 13, திங்கட்கிழமை அதிகாலை 12.01 முதல்:

- கவலைக்குரிய உள்ளூர் அரசுப் பகுதிகளுக்கு **வெளியே** வசிப்பவர்களுக்கு, ஒரு நபரின் உள்ளூர் அரசுப் பகுதிக்குள்ளே (LGA) அல்லது வீட்டிலிருந்து 5 கி.மீ.க்குள்ளே, ஐந்து நபர்கள் வரை (குழந்தைகள் உட்பட, அனைத்துப் பெரியவர்களும் கட்டாயம் தடுப்பூசி போட்டிருக்க வேண்டும்) வெளிப்புறக் கூட்டங்களுக்கு அனுமதிக்கப்படும்.

- கவலைக்குரிய உள்ளூர் அரசுப் பகுதிகளுக்கு **உள்ளே** வசிப்பவர்களுக்கு, பெரியவர்கள் அனைவரும் தடுப்பூசியைப் போட்டுள்ள குடும்பங்கள், தற்போதுள்ள விதிமுறைகளுக்குட்பட்டு, (ஊரடங்கு நேரத்துக்கு அப்பால் ஒரு மணி நேரம் மட்டும் மற்றும் வீட்டிலிருந்து 5 கி.மீ.க்குள்) பொழுதுபோக்கிற்காக (உல்லாசப் பயணம் உள்பட) வெளியிடங்களில் ஒன்றுகூடலாம். உடற்பயிற்சிக்காக அனுமதிக்கப்பட்ட ஒரு மணிநேரத்துக்கு மேலே இது கூடுதல் நேரமாகும்.

ஆறு மில்லியன் தடுப்பூசி மருந்து இலக்கை அடைய உதவும் வகையில், நியூ சவுத் வேல்ஸ் முழுவதிலும் உள்ள மில்லியன் கணக்கான மக்கள் முன்வந்து தடுப்பூசியைச் செலுத்திக் கொண்டதற்காக முதல்வர் கிளாடிஸ் பெரெஜிக்லியன் (Gladys Berejiklian) நன்றி தெரிவித்தார்.

"தடுப்பூசி போட முன்வரும் ஒவ்வொரு நபருக்கும் நாங்கள் மிகவும் நன்றியுடையவர்களாக இருக்கிறோம், எனென்றால் நாம் எவ்வளவு அதிகமாக தடுப்பூசிகளைப் போட்டுக் கொள்கிறோமோ அவ்வளவு சீக்கிரமாகக் கட்டுப்பாடுகளை நீக்கமுடியும்," என்று திருமதி பெரெஜிக்லியன் கூறினார்.

"செப்டம்பர் 13 வரையிலான இந்த முன்னெடுப்புக்காகச் சமூகத்தினரின் பொறுமையை நாங்கள் பாராட்டுகிறோம், இந்த கூடுதல் நேரமானது தடுப்பூசிகளின் தற்போதைய திடீர் அதிகரிப்பு, பயன்பாட்டுக்கு வருவதற்கு உதவிகரமாக இருக்கும்."

செயல்திட்டத்தின் ஒரு பகுதியாக, பின்வரும் இலக்குகள் அடையும் பட்சத்தில், சுதந்திரங்கள் பின்வருமாறு இருக்கும்:

- 70 சதவீத முழுமையான தடுப்பூசிகள்: **தடுப்பூசி போட்டவர்களுக்கு**, பல்வேறு குடும்பம், தொழில், சமூகம் மற்றும் பொருளாதாரக் கட்டுப்பாடுகள் நீக்கப்படும்.
- 80 சதவீத முழுமையான தடுப்பூசிகள்: தொழில், சமூகம் மற்றும் பொருளாதாரம் மீதான கட்டுப்பாடுகளை மேலும் தளர்த்துவது.

கோவிட்-பாதுகாப்பான வழியில் வணிகங்களைத் திறந்து, செயல்படத் தயார்ப் படுத்துவதற்கான கோட்பாடு – ஆதார நடவடிக்கையாக, வரவிருக்கும் மாதங்களில் சில வர்த்தக நிலையங்களில் சோதனை முயற்சிகளை மேற்கொள்ளவும் அரசாங்கம் ஆராய்ந்து வருகிறது.

இந்த செயல்திட்டம் சுதந்திரத்துக்கான எங்கள் பாதை என்றும், அத்துடன் இனிமேலும் தடுப்பூசி போடுவதற்கு இது எங்களது மிகப்பெரிய தூண்டுகோலாகும். இதன்மூலம் நாம் இயல்பு நிலைக்குத் திரும்ப முடியும் என்று துணை முதல்வர் ஜான் பாரிலாரோ (John Barilaro) தெரிவித்தார்.

"இன்று அறிவிக்கப்பட்ட செயல்திட்டம் ஒரு தெளிவான பாதையைக் கோடிட்டுக் காட்டுகிறது. இதில் நியூ சவுத் வேல்ஸ் 70 சதவீதத்தை எட்டும்போது, முழுமையாகத் தடுப்பூசி போட்டவர்களுக்குப் பல்வேறு குடும்பம், தொழில், சமூகம் மற்றும் பொருளாதாரக் கட்டுப்பாடுகள் நீக்கப்படும்," என்று திரு. பாரிலாரோ கூறினார்.

"அன்புக்குரியவர்களுடன் சேர்ந்து உணவு உட்கொள்ளுதல், அல்லது நண்பர்களுடன் அமர்ந்து குடித்தல் போன்ற நிகழ்வுகள் மிக அருகில் உள்ளன, ஆனால் அது சாத்தியமாக, தடுப்பூசி செலுத்துவதில் நாம் வேகத்தை அதிகரிக்க வேண்டும்."

இரண்டு தவணை தடுப்பூசிகள் மக்களை மருத்துவமனையில் சேர்க்கப்படுவதிலிருந்தும், மரணத்திலிருந்தும் பாதுகாக்க உதவுவது மட்டுமல்லாமல், தொற்றுப் பரவலைக் குறைக்கவும் உதவுகிறது என்று சுகாதார அமைச்சர் ப்ராட் ஹஸார்ட் (Brad Hazzard) தெரிவித்தார்.

"இரண்டு தவணை தடுப்பூசிகள், வைரஸ் தொற்றுப் பரவலை ஏறக்குறைய 90 சதவீதம் ஒட்டுமொத்தமாகக் குறைப்பதற்கு வழிவகுக்கிறது," திரு. ஹஸார்ட்.

நீங்கள் கோவிட்-19 தடுப்பூசிக்கு முன்பதிவு செய்யவில்லை என்றால், தயவுசெய்து கூடிய விரைவில் சந்திப்பு ஏற்பாட்டுக்கு முன்பதிவு செய்து கொள்ளவும்.

**உங்கள் 'கோவிட்-19 தடுப்பூசிக்கான சான்றைப்' பெற பல்வேறு தெரிவுகள் உள்ளன:**

- உங்கள் கோவிட்-19 டிஜிட்டல் சான்றிதழை எக்ஸ்பிரஸ் பிளஸ் மெடிகேர் (*Express Plus Medicare*) கைப்பேசி செயலி (app) மூலமாகவோ அல்லது myGov வழியாக உங்கள் மெடிகேர் இணையக் கணக்கு (*Medicare online account*) மூலமாகவோ பதிவிறக்கம் செய்யவும்.
    - உங்கள் ஆப்பிள் வாலட் (Apple Wallet) அல்லது கூகுள் பே (Google Pay) -இல், உங்கள் கோவிட்-19 டிஜிட்டல் சான்றிதழை நீங்கள் சேர்க்கலாம்.
    - சேவைகள் ஆஸ்திரேலியா இணையதளத்தில் (Services Australia website) வழிமுறைகள் கிடைக்கும்.
- உங்களுக்குச் சான்று இணையத்தில் கிடைக்கவில்லை என்றால், உங்களது தடுப்பூசி வழங்குநர் உங்கள் நோய்த்தடுப்பு வரலாறு அறிக்கையை உங்களுக்காக அச்சிட்டுத் தரலாம்.
- ஆஸ்திரேலிய நோய்த்தடுப்புப் பதிவேட்டை (Australian Immunisation Register) 1800 653 809 என்ற தொலைபேசி எண்ணில் அழைத்து (திங்கள் முதல் வெள்ளி வரை காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரை), உங்கள் அறிக்கையை உங்களுக்கு அனுப்பும்படி கேட்கவும். அது அஞ்சலில் உங்களுக்கு வந்து சேர 14 நாட்கள் வரை ஆகலாம்.
- நீங்கள் மெடிகேருக்குத் தகுதியற்றவராக இருந்தால், ஆஸ்திரேலிய நோய்த்தடுப்புப் பதிவேட்டை (Australian Immunisation Register) அழைத்து, உங்கள் சான்றிதழை உங்களுக்கு அனுப்பச் சொல்லலாம் அல்லது myGov மூலமாகத் தனிப்பட்ட ஹெல்த்கேர் அடையாளச் சேவையைப் (Individual Healthcare Identifiers service – IHI service) பயன்படுத்தி உங்கள் கோவிட்-19 சான்றிதழை உங்கள் டிஜிட்டல் வாலட்டில் சேர்க்கலாம்.

சமீபத்திய தகவல்களுக்கு பின்வரும் இணையதளத்துக்குச் செல்லவும்:
nsw.gov.au/covid-19

**MEDIA: Harriet Glenn | Premier | 0409 522 869**
**Georgina Kentwell | Deputy Premier | 0427 206 308**
**Julie Garvey | Minister Hazzard | 0448 569 746**